# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1992 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

---

*[1992, யூலை மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1992, யூலை மாதம் 31 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 45 தபாற் செலவு: ரூபா 1.00

## 1992 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம்

[1992, யூலை மாதம் 28 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 40/89 / 2035

### 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(4) ஏதேனும் பொருளிலுள்ள ஏதேனும் சுட்டுத்துண்டை, விவரணத்தை அல்லது குறிப்பிடப்பட்ட விலையை அகற்றும், மாற்றும், துடைத்தழிக்கும், அழித்துவிடும் அல்லது உருவழிக்கும் அல்லது எந்தப்பொருளில் இருந்து அல்லது எந்தப்பொருளின்மீது சுட்டுத்துண்டு, விவரணம் அல்லது குறிப்பிடப்பட்ட விலை அகற்றப்பட்டு, மாற்றப்பட்டு, துடைத்தழிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அல்லது உருவழிக்கப்பட்டு உள்ளதோ அந்தப் பொருளை விற்கும் அல்லது விற்கமுனையும் எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் அல்லது அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி எதனையும் மீறிச் செயலாற்றும் ஆளொவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.".

(2) ஓராம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) (அ) பதினோராம் பிரிவின் அல்லது 12 ஆம் பிரிவின் அல்லது 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறியமை காரணமாக, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் எவரே

2 — D 016055 — 1195 (91/09)

னும் ஆள், நீதிவானொருவரின் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் :—

(i) முதலாவது தவறின் விடயத்தில் ஓராயிரம் ரூபாவுக்குக் குறையாததும் மூவாயிரம் ரூபாவுக்கு மேற்படாததும் ஆன குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமே ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ii) அடுத்துப் பின்னர் புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் எழாயிரத்து ஐநூறு ரூபாவுக்குக் மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும், ஆறுமாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின்பிழானதும், அதுதொடர்பில் (அ) எனும் பந்தியினால் தண்டனை எதுவும் விதித்துரைக்கப்பட்டதுமான தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் எவரேனும் ஆள் நீதிவானொருவரின் முன்னிலையில் குற்றத்தீர்ப்பு அளிக்கப்படுவதன்மேல் பின்வருவனவற்றுக்கு ஆளாதலும் வேண்டும் :—

(i) முதலாவது தவறின் விடயத்தில் மூவாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்குமே ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(ii) அடுத்துப் பின்னர் புரியப்படும் தவறொன்றின் விடயத்தில் எழாயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கும், ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஆளாதல் வேண்டும்".

*ஒவ்வாமையின் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.